# தி.மு.க. மகளிர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

21 ஆம் பக்கத் தொடர்ச்சி

### ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ப. அன்னக்கிளி கீழத் தெரு, கண்ணுக்குடி கிழக்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) மு. வனிதா குடிக்காடு, ஆம்லாப்பட்டு தெற்கு, ஒரத்தநாடு தஞ்சாவூர். 2) செ. அபிராமி தெற்கு தெரு, திருமங்கலக்கோட்டை மேற்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) செ. சரிதா சோழகன்குடிகாடு, ஆவிடநல்விஜயபுரம், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 4) வி. சூரியகலா கிழக்கு தெரு, வெள்ளூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) ஆ. சங்கீதா பிரியா வாண்டையார் தெரு, திருமங்கலக்கோட்டை, கீழையூர், தஞ்சாவூர்.

### ஒரத்தநாடு கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ரா. கலையரசி கீழ்வன்னிப்பட்டு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) சே. தாமரைச்செல்வி புதூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 2) மு. மகேஷ்வரி ஒக்கநாடு, மேலையூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) செ. சசிகலா கண்ணந்தங்குடி, மேலையூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 4) ரா. சியமளா ஒக்கநாடு, கீழையூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) ரா. தமிழ்இலக்கியா பூவத்தூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.

### ஒரத்தநாடு மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ஜோ. ரோகிணி நடுநகர், வடக்கூர் தெற்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர் - 614902. துணை அமைப்பாளர்கள் - 1) ரா. ராஜதிலகவதி நடுத் தெரு, சேதுராயன்குடிகாடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 2) சே. கற்பகம் எத்திரகார தெரு, பாச்சூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) இ. ராதா செப்பரித்தோப்பு, கருக்காடிப்பட்டி, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 4) மு. வீரச்செல்வி கோட்டைத் தெரு, தெக்கூர் மேற்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) ரா. ராணி ஆதிதிராவிடர் தெரு, கக்கரைக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர்.

### திருவோணம் வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சே. வனிதா வடக்கு தெரு, வடக்குகோட்டை, திருவோணம், தஞ்சாவூர் - 614904 துணை அமைப்பாளர்கள் - 1) கு. விஜயா கீழமேட்டுப்பட்டி, திருவோணம், தஞ்சாவூர், 2) ரா. வள்ளி வடக்கு தெரு, அக்கரைவட்டம், திருவோணம், தஞ்சாவூர். 3) கோ. காளியம்மாள் அம்பலகாரத் தெரு, மணிக்கிரான் விடுதி, தஞ்சாவூர். 4) மூ. சுகந்தி வெள்ளையன் தெரு, சோழகன்கரை, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) தி. தேன்மொழி தெற்கு தெரு, திப்பியக்குடி, பாப்பநாடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர்.

### வல்லம் பேரூர்

அமைப்பாளர் - அ. சரோஜினி அன்பு நகர், வல்லம், தஞ்சாவூர் - 613403. துணை அமைப்பாளர்கள் - 1) ச. அன்புச்செல்வி தெற்கு காமாட்சியம்மன் கோவில் தெரு, வல்லம், தஞ்சாவூர். 2) கோ. மேனகா ரெட்டிபாளையம் ரஸ்தா, வல்லம், தஞ்சாவூர். 3) ஆ. சத்தியா அண்ணா நகர், வல்லம், தஞ்சாவூர்.

### திருவையாறு பேரூர்

அமைப்பாளர் - மு. நாகரெத்தினம் திருமஞ்சனவீதி, திருவையாறு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) மு. சுமதி பருத்திக்குடி, திருவையாறு, தஞ்சாவூர். 2) தொ. ஜெயசீலி தமிழர்மேட்டுத்தெரு, திருவையாறு, தஞ்சாவூர். 3) பா. புவனா வடக்குவீதி, திருவையாறு, தஞ்சாவூர்.

### மேலத்திருப்பூந்துருத்தி பேரூர்

அமைப்பாளர் - ரா. ஸ்ருதிகா புதுக்காலனி, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) கோ. தமிழ்செல்வி காளியம்மன் கோவில் தெரு, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர். 2) செ. கோகிலா புதுத் தெரு, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர். 3) செ. ராதிகா பெரிய தெரு, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர்.

### திருக்காட்டுப்பள்ளி பேரூர்

அமைப்பாளர் - க. தனலெட்சுமி மார்க்கெட் குறுக்கு தெரு, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர் - 613104. துணை அமைப்பாளர்கள் - 1) மா. செந்தாமரை லயன்கரை, திருக்காட்டுப்பள்ளி தஞ்சாவூர். 2) ரா. எஸ்தர் கிறிஸ்துவத் தெரு, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர். 3) ஆர். வாசுகி ஆதிதிராவிடர் தெரு, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர்.

### ஒரத்தநாடு பேரூர்

அமைப்பாளர் - கா. சுஜாதா தெலுங்குத் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) மு. கபிபுனிஷா தெற்கு முஸ்லீம் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 2) பா. வேணி கம்மாளத் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) அ. சாந்தகுமாரி ராயர் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர்.

## தஞ்சை மாநகரம்

### மருத்துவக்கல்லூரி பகுதி

அமைப்பாளர் - ஜீவமணி 4வது தெரு, பெரியார் நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) கே. அறிவுச்செல்வி பாண்டியன் நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர். 2) எஸ். அகிலா சிவாஜி நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர். 3) எம். மேரி கீழத் தெரு, கணபதி நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர். 4) சு. வித்யா டி.பி.எஸ்.நகர், எம்.சி.ரோடு, தஞ்சாவூர். 5) அ. அன்புச்செல்வி 2வது தெரு, முனிசிபல் காலனி, எம்.சி. ரோடு, தஞ்சாவூர்.

### கோட்டை பகுதி

அமைப்பாளர் - த. சசிகலா மேல அலங்கம், தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) ரா. தேன்மொழி பெருமாள் காலனி, பெரியசாலை, தஞ்சாவூர். 2) ரா. ராஜம் சேவப்பநாயக்கன்வாரி, சீனிவாசபுரம், தஞ்சாவூர். 3) பர்ஜனாபேகம் சக்கநாயக்கன் தெரு, சாஜிதா மன்சில், தஞ்சாவூர். 4) க. ரம்யா மேட்டு எல்லையம்மன் கோவில் தெரு, ஆபிரகாம்பண்டிதர்ரோடு, தஞ்சாவூர். 5) ஜெ. நிஷாந்தி சவேரியார் கோவில் தெரு, ராத்தன்பாளையம், கீழவாசல், தஞ்சாவூர்.

### கீழவாசல் பகுதி

அமைப்பாளர் - ஜெ. அமுதவள்ளி 1, தெரு, அன்புநகர், தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) ப. பார்வதி 3வது தெரு, காமராஜ் நகர், தஞ்சாவூர். 2) க. சாவித்திரி 3வது தெரு, அன்பு நகர், விளார் சாலை, தஞ்சாவூர். 3) மு. ரேவதி 3வது தெரு, காமராஜ் நகர், தஞ்சை மாவட்டம். 4) ரா. கீதா ஹந்திராயர் காலனி, கீழவண்டிக்காரத் தெரு, தஞ்சாவூர். 5) யூ. மரியா மிஷன் தெரு, கங்காணியார் தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.

### கரந்தை பகுதி

அமைப்பாளர் - அ. ஜீலியட்ராணி காவடிக்கார தெரு, கீழவாசல், தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) தி. வேம்பு குறிஞ்சி நகர் விரிவாக்கம், பாலபநந்தவனம், தஞ்சாவூர். 2) டி. பாப்பு பானு தென்றல்மதி இல்லம், பூமால், இராவுத்தர் கோவில் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். 3) வீ. விஜயா புண்ணியமூர்த்தி தோட்டம், வடக்கு வாசல், தஞ்சாவூர். 4) யோ. வள்ளி சீரேஷ்சத்திரம் ரோடு, வடக்கு வாசல், தஞ்சாவூர். 5) தி. கோகிலா சாலைக்காரத் தெரு, பழைய மாரியம்மன் கோவில் சாலை, கீழவாசல், தஞ்சாவூர்.

| | |
|---|---|
| "அண்ணா அறிவாலயம்" | ஜெ. ஹெலன்டேவிட்சன், |
| சென்னை - 18 | செயலாளர் |
| நாள்- 13-03-2025. | தி.மு.க. மகளிர்அணி |



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்கு பகுதி மாணவரணி சார்பாக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் முன்னிட்டு பகுதி அமைப்பாளர் எஸ் சங்கர் தலைமையில் நடைபெற்ற பொது கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று எழுச்சி எழுச்சி உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் பகுதி செயலாளர் ச. பரமசிவம் மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய்,வட்டச் செயலாளர் வழக்கறிஞர் அருள் கண்ணன், ஜெய்சங்கர் மாமன்ற உறுப்பினர் புஷ்பலதா ஜெய்சங்கர் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து

## சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் கூட்டணி கட்சியினர் பங்கேற்பு!

சேலம், மார்ச் 14–

நாடாளுமன்றத்தில் மும்மொழிக் கொள்கை தொடர்பான விவாதத்தில் பேசிய ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான், தமிழக எம்.பிக்களை நாகரீக மற்றவர்கள் எனக் கூறினார். இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில், அவருக்கு எதிராக தமிழகம் முழுவதும் கழகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சேலம் கிழக்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் ஆத்தூரில் பேருந்து நிலையம் முன்பு தி.மு.க மற்றும் கூட்டணி கட்சிகளுடன் கண்டன கோஷங்கள் எழுப்பி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து தர்மேந்திர பிரதானின் உருவபொம்மையை பெண்கள் ஒப்பாரி வைத்து தீயிட்டு கொளுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், சந்திரமோகன், சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் உமாசங்கர், விஜயகுமார், மாணிக்கம், ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன் ,தங்க மருதமுத்து ,டாக்டர் செழியன் ,மணி பாலமுருகன், சித்தார்த்தன், அழகுவேல்,

நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன், சார்பு அணி நிர்வாகிகள் சிவராமன், மாணிக்கம் , கூப் வேல்முருகன், ராமச்சந்திரன், குமார், சம்பத்குமார், ஸ்டாலின், புவனேஸ்வரி, அருண், சக்திவேல், வரதராஜன், செல்வராஜ், ராஜவேல், நகர மன்ற தலைவர்கள் அலெக்சாண்டர், நிர்மலா பபிதா, பர்கத் அலி, பேரூர் செயலாளர்கள் முருகப் பிரகாஷ், பாபு, வெங்கடேஷ், பாலமுருகன், காங்கமுத்து, செல்வராஜ் , சரவணன், சண்முகம், செல்வம், பத்திரம் மனோகரன், பூக்கடை ராஜா, பைத்தூர் ரவி, சசிகுமார் , மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் , மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதி புனிததோமையார் மலை ஒன்றியம் திருவஞ்சேரி ஊராட்சி ரூ.22.48 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கலந்து கொண்டு திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.கே. விவேகானந்தன் ஏ ரவி, ஊராட்சி ஒன்றிய குழுவின் தலைவர் சங்கீதா பாரதிராஜன், ஒன்றிய குழு துணை தலைவர் பா.பிரசாத், அம்சவேணிகுணா, அமுதா வேல்முருகன் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிறைவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற

## 37 மாவட்டங்களைச் சேர்ந்த 565 மாணவர்களுக்கு பரிசு!

### அமைச்சர் கோவி.செழியன் வழங்கி சிறப்புரை!

சென்னை, மார்ச் 14-

திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிறைவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 37 மாவட்டங்களைச் சேர்ந்த 565 பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழினை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்.

சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிறைவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 37 மாவட்டங்களைச் சேர்ந்த 565 பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழினை வழங்கியதுடன், தொழில்நுட்பக் கல்வி



இயக்ககத்தின் மேம்படுத்தப்பட்ட இணையதளத்தினையும், 2025-26 ஆம் ஆண்டிற்கான பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான அறிவிக்கையினையும் மற்றும் 18 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது:-

அய்யன் திருவள்ளுவரின் 133 அடி திருவுருவச் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவையொட்டி 31.12.2024 மற்றும் 01.01.2025 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முக்கடல் சூழும் குமரி முனையில் வெள்ளி விழா, கொண்டாடப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருக்குறளின் பெருமையினை கல்லூரி / பல்கலைக்கழக மாணாக்கர்களிடம் வெளிப்படுத்தும் வகையில் குறும்படங்கள், திரைச்சுருள்கள், எண்ணிம / செயற்கை நுண்ணறிவு (Digital and Artificial Intelligence) வாயிலாகத் திருக்குறளின் சிறப்பினை உணர்த்தும் ஓவியப் போட்டிகள் (Oil paintings, Graphics, Reels, Arts) அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பாராட்டுச் சான்று மறும் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. மீதமுள்ள 37 மாவட்டங்களில் வெற்றி பெற்ற 563 மாணாக்கர்களுக்கு, இந்த் அண்ணா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு அரங்கத்தில் பரிசுகளையும் சான்றிதழ்களையும் அளிப்பதில் நான் பெருமைக் கொள்கிறேன், பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அதன்படி, வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,500/, இரண்டாம் பரிசாக ரூ.2,500/ மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.1,500/ வழங்கப்படுகிறது.

திருவள்ளுவர் எல்லோருக்கும் பொதுவானர். திருவள்ளுவர், தமிழர்களுக்காக இருக்கக்கூடிய உலக அடையாளம்! திருக்குறள் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம்! திருவள்ளுவருக்கு சாயம் பூச நினைக்கிற தீயவர்களை விரட்டியடிக்க கடமைப்பட்டிருககின்றோம். புதுமைப்பெண், தமிழ்புதல்வன் மற்றும் நான் முதல்வன் என முத்தான திட்டங்களை உயர்கல்விக்குக்கு தந்து வரலாற்றில் சாதனைக்கு மேல் சாதனையாகப் படைத்துக் கொண்டிருக்கிறார் நமது தலைவர் தளபதியார்.

#### மேம்படுத்தப்பட்ட இணையதளம்

தொழில்நுட்பக் கல்வித் துறையில் மேம்படுத்தப்பட்ட (https://dte.tn.gov.in) என்ற இணையதளம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இந்நவீன முயற்சியைத் திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மாணாக்கர்களுக்கும், அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவரும் எளிய வகையில் அணுகி துறையின் அனைத்து செயல்பாடுகளையும் அறிந்து கொள்வதற்கு வசதியாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த புதிய இணையதளத்தில் பட்டயப் படிப்பு மாணாக்கர்களுக்கான இணையவழி சேவைகள் புதிதாக பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் மாணாக்கர்களின் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை சரிபார்ப்பு (Genuineness Verification), இடம்பெயர்தல் சான்றிதழ் (Migration Certificate) மற்றும் மதிப்பெண் பட்டியல் (Transcription) ஆகியவற்றினை அறிந்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. “மக்கள் பணியே முதல் பணி” எனச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் நமது முதலமைச்சர். அவர் வழியில், “அனைவருக்கும் அனைத்தும்” விரைந்து கிடைக்க உதவும் பல்வேறு “திராவிட மாடல் திட்டங்களில்” இந்த “மேம்படுத்தப்பட்ட இணையதளம்” வசதியும் ஒன்றாகும்.

பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் பாடங்களை எளிதாகப் புரிந்து கொள்ளவும், தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தவும் உதவிடும் வகையில், பாட வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு சிறப்பு காணொளி தொடர் இன்று வெளியிடப்பட்டுள்ளது. இது தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழிகளிலும் மாணாக்கர்களுக்கு விளக்கப்படுகிறது. மேலும், இந்த காணொளி தொடரை Youtube “DOTE STREAMING”இல் https://www.youtube.com/@dotestreaming7912 என்ற இணையதளத்தில் பார்த்து தெரிந்து பயன் பெறலாம்.

#### கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழுள்ள அரசு கல்லூரிகளில் பணிபுரிந்து எதிர்பாராமல் உயிரிழந்த அரசு ஊழியர்களின் 18 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமன ஆணைகளை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அரசு ஊழியர்களின் காவல் அரணாகக் கழக அரசு என்றும் நிற்கும் என்பதற்கு இது சாட்சி. புதுமைப்பெண், தமிழ்புதல்வன் மற்றும் நான் முதல்வன் என முத்தான திட்டங்களை உயர்கல்விக்குக்கு தந்து வரலாற்றில் சாதனைக்கு மேல் சாதனையாகப் படைத்துக் கொண்டிருக்கிறார் நமது தலைவர் தளபதியார்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சிக்கு உயர் கல்வித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற துணைத் தலைவர் எம்.பி. விஜயகுமார் (ஓய்வு) ஆகியோர் தலைமை வகித்தனர்.

மேலும், தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, வழிகாட்டுதல் குழு உறுப்பினர் முனைவர் எஸ். உஷா, அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஜெ. பிரகாஷ், தொழில்நுட்பக் கல்வி இயக்கக கூடுதல் இயக்குநர் (பொ.), முனைவர் இ.எம். சீனிவாசன் மற்றும் உயர்கல்வித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவு தியாகராயர் மேற்கு பகுதி அமைப்பாளர் எண் அப்துல் ரகுமான் தலைமையில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஜே கருணாநிதி எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார். உடன் சிறுபான்மை நலப் பிரிவு செயலாளர் ஏ. சுபேர் கான், கே. ஏழுமலை எம்.சி., கோடம்பாக்கம் முசத்தியா, நாமோ முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, கார்த்திகா பாஸ்கர் எம்.சி., மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில்

## தஞ்சை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர்க் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

### மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு தஞ்சாவூர் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : (16.03.2025 ஞாயிற்றுக்கிழமை) நேரம்: காலை 10.00 மணிக்கு

இடம் : ஹோட்டல் மிளகு, (ரயில்வே ஸ்டேஷன் அருகில்) கும்பகோணம்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி.



திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மண்டலம் 2, 21 வது வட்டம் பாடசாலை தெருவில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் முன்னிலையில் ரூபாய் 1 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறை (இரண்டாவது தளம்) கட்டிடம் கட்டும் பணியை மாநில மீனவரணி துணைத்தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் துவக்கி வைத்தார்.